**டிசம்பர் – 23**

# TNPSC துளிகள்

- கேரளாவின் கோழிக்கோட்டில் உள்ள ராமநாட்டுக்கராவைச் சேர்ந்த ஆதித்யா கே. என்பவர், அம்மாநிலத்தின் துணிச்சலுக்கான மிக உயர்ந்த கௌரவ விருதான "பாரத் விருதைப்" பெற்ற முதலாவது குழந்தையாக உருவெடுத்துள்ளார்.
    - எரியும் பேருந்தில் இருந்து 20 பேரை காப்பாற்றியதற்காக அவருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.
- வெங்கையா நாயுடு புது தில்லியில் 'கொந்தளிப்பு மற்றும் வெற்றி: மோடியின் ஆண்டுகள்' என்றப் புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.
    - இந்தப் புத்தகத்தை ராகுல் அகர்வால் மற்றும் பாரதி எஸ் பிரதான் ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர்.
- இந்திய வர்த்தக மற்றும் தொழிற் துறை கூட்டமைப்பின் (Federation of Indian Chambers of Commerce & Industry - FICCI) 92வது ஆண்டு மாநாடு புது தில்லியில் நடத்தப்பட்டது.
- சிறை நிர்வாகத்தில் சீருடை அணிந்த பெண்கள் குறித்த இரண்டாவது தேசிய மாநாடானது மத்தியப் பிரதேசத்தின் போபாலில் உள்ள மத்தியக் காவல் துறைப் பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.
    - முதல் தேசிய மாநாடானது புது தில்லியில் 2017 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

# தேசியச் செய்திகள்

## ஸ்வச் சமுந்திரா NW - 2019

- இந்தியக் கடலோரக் காவல் படையானது 2 நாட்கள் நடைபெறும் பிராந்திய அளவிலான மாசுபாட்டு பதிலெதிர்ப்புப் பயிற்சியான 'ஸ்வச் சமுந்திரா NW-2019' என்ற பயிற்சியை கட்ச் வளைகுடாவில் உள்ள வடினார் பகுதியில் நடத்தியது.
- எண்ணெய் மாசுபாட்டு சம்பவங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம், பதிலெதிர்ப்புச் செயல் முறையை உருவாக்குவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும்.

## EChO வலையமைப்பு

- இந்திய அரசின் முதன்மை அறிவியல் ஆலோசகரான கிருஷ்ணசாமி விஜயராகவன் புது தில்லியில் "EChO வலையமைப்பு (EChO Network)" என்ற தேசிய நிகழ்ச்சியைத் தொடங்கியுள்ளார்.
- இந்த வலையமைப்பானது இந்தியாவில் பன்முகத் தன்மை வாய்ந்த தலைமைக்கான மாதிரியை வழங்குகின்றது.
- இந்தத் திட்டத்தின் நோக்கமானது பல்வேறு துறைகளில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு குடிமக்கள், அரசாங்கம் மற்றும் பிறரின் மூலமாக ஆராய்ச்சி சம்பந்தமான அறிவு மற்றும் இந்திய சூழலியல் & சுற்றுச்சூழல் பற்றிய விழிப்புணர்வு ஆகியவற்றைக் கொண்டு வருவதாகும்.

# பொருளாதாரச் செய்திகள்

## ட்விஸ்ட் நடவடிக்கை

- இந்திய ரிசர்வ் வங்கியானது ஒரே நேரத்தில் அரசுப் பத்திரங்களை வாங்குதல் (2029 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடையக் கூடிய அரசுப் பத்திரங்கள்) மற்றும் விற்பனை செய்தல் (2020 ஆம் ஆண்டில் முதிர்ச்சியடையக் கூடிய குறுகிய காலப் பத்திரங்கள்) போன்றவற்றின் மூலம் தலா 10,000 கோடி ரூபாய் மதிப்புள்ள அரசுப் பத்திரங்களை அதன் திறந்த சந்தை நடவடிக்கைகளின் மூலம் பெற இருக்கின்றது.
- இது இலாபத்தை நிர்வகிப்பதையும் நீண்ட காலக் கடன் வாங்குவதை மலிவானதாக்குவதையும் இலக்காகக் கொண்டுள்ள ஒரு நடவடிக்கையாகும்.
- ரிசர்வ் வங்கியானது நீண்ட காலப் பத்திரங்களை வாங்குவதனால், அவற்றுக்கான தேவை அதிகரிப்பானது நீண்ட கால இலாபத்தைக் குறைக்க வழிவகுக்கின்றது.
- இதன் நீண்ட கால வட்டி விகிதங்களானவை பொருளாதார முதலீடு மற்றும் வளர்ச்சிக்கு முக்கியமானதாக உள்ளன.
- குறுகிய கால விகிதங்கள் அதிகரிக்கப்படுவதாலும் நீண்ட கால விகிதங்கள் குறைக்கப்படுவதாலும் இதன் இலாப வளைவு “மாறுபட்டதாக” மாறுகின்றது.
- வட்டி விகிதங்களைக் குறைத்த போதிலும், நீண்ட கால முதலீட்டிற்கான வட்டி விகிதங்கள் அதிகமாக இருக்கும்போது மத்திய வங்கிகள் இந்த நடவடிக்கையைத் தேர்வு செய்கின்றன.
- திறந்த சந்தை செயல்பாடுகள் (Open Market Operations - OMO) என்பது பொருளாதாரத்தில் பண விநியோகத்தைக் கட்டுப்படுத்த ஒரு நாட்டின் மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் பணவியல் கொள்கைக் கருவிகளில் ஒன்றாகும் (மொத்த பணத்தின் அளவைக் கட்டுப்படுத்த அல்லது ஒழுங்குபடுத்துவதற்குப் பயன்படும்).
- OMOகளானவை ரிசர்வ் வங்கியினால் பணம் வழங்கல் நிலைமைகளை சரி செய்வதற்காக அரசாங்கப் பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் அல்லது வாங்குவதன் மூலம் நடத்தப்படுகின்றன.

### *OT பற்றி*

- நீண்ட காலப் பத்திரங்களை வாங்குதல் மற்றும் குறுகிய காலப் பத்திரங்களை விற்பனை செய்வதற்கான இந்த நடவடிக்கையானது ட்விஸ்ட் நடவடிக்கை (Operation Twist - OT) என்று அழைக்கப்படுகின்றது.
- அமெரிக்கா இரண்டு முறை OTஐ அறிவித்துள்ளது. 1961 ஆம் ஆண்டில் ஜான் எஃப் கென்னடியின் ஆட்சியின் போது முதல் முறையாகவும், 2011 ஆம் ஆண்டில் ஒபாமாவின் ஆட்சியின் போது இரண்டாவது முறையாகவும் அறிவித்துள்ளது.
- ஜப்பான் தனது சொந்த OT பதிப்பினை “தர மற்றும் அளவுருக்களின் அடிப்படையில் எளிமைபடுத்தும் நடவடிக்கை” (Qualitative and Quantitative Easing - QQE) என்று 2013 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## 5ஜி சோதனை

- 5ஜி (கம்பியில்லாத் தொழில்நுட்பத்தின் ஐந்தாவது தலைமுறை) சோதனையானது நடப்பு நிதியாண்டின் (2019 - 2020) கடைசிக் காலாண்டில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

- 5G தொழில்நுட்பத்தினைப் பெறும் எந்தவொரு திட்டமும் பின்வரும் இரண்டு கூறுகளை கவனத்தில் கொள்ள வேண்டும். அவை: முதலில் புதிய தொழில்நுட்பத்தை ஏற்றுக் கொள்ளுதல், இரண்டாவதாக அதனால் ஏற்படும் தேசிய பாதுகாப்பின் அவசியங்கள் ஆகியனவாகும் .

### டன்சோ மற்றும் த்ரோட்டில்

- நீண்ட தூர மற்றும் தானே இயங்கும் ஆளில்லா விமானத்தின் பயன்பாட்டை சோதனை செய்வதற்காக, கூகிள் நிறுவனத்துக்குச் சொந்தமான விரைவு விநியோக ஸ்டார்ட்அப் அமைப்பான "டன்ஸோ" மற்றும் பெங்களூருவைச் சேர்ந்த ஆளில்லா விமானங்களை உருவாக்கும் "த்ரோட்டில் விண்வெளி நிறுவனம்" ஆகியவற்றின் பயன்பாடுகளுக்கு இந்தியாவின் உள்நாட்டு விமானப் போக்குவரத்து இயக்குநரகமானது (Directorate General of Civil Aviation - DGCA) ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த ஒப்புதல்களானவை, கண்ணுறு ஒளிக்கு அப்பாற்பட்ட ஆளில்லா விமானங்களின் செயல்பாடுகள் என அழைக்கப்படும் DGCAன் சோதனைத் திட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளன .
- நீண்ட தூர ஆளில்லா விமானங்கள் மூலமாக இந்தியாவின் உள்நாட்டில் தளவாட சேவைகள் கணிசமாக மேம்படும் மற்றும் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை இவை ஏற்படுத்தக் கூடும்.

### ஷார்ஜா விண்மீன் மற்றும் அதன் கிரகம்

- சர்வதேச வானியல் ஒன்றியம் (IAU - International Astronomical Union) ஆனது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட விண்மீன் மற்றும் அதன் கிரகத்தின் புதியப் பெயர்களை அறிவித்துள்ளது.
- இது 'எச்.ஐ.பி 7943' நட்சத்திரத்திற்கு "ஷார்ஜா" என்றும் அதன் கிரகங்களில் ஒன்றுக்கு (வெளிக்கோள்) "பார்ஜீல்" என்றும் பெயரிடப்பட்டுள்ளது.
- ஐக்கிய அரபு அமீரகத்தின் தலைநகரான ஷார்ஜா நகரத்தின் சாதனைகளைப் பாராட்டும் வகையில் இந்த நட்சத்திரத்திற்கு "ஷார்ஜா" என்று பெயரிடப்பட்டது.
- ஒரு பார்ஜீல் என்பது காற்றாலைக் கோபுரமாகும். காற்றாலைக் கோபுரமானது காற்றை காற்றுப் பதனமாக்க வடிவமாக மறுசுழற்சி செய்து காற்றின் ஓட்டத்தை வழிநடத்துகின்றது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### 18வது தேசியக் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு வாரியக் கூட்டம்

- இந்தியக் கடலோரக் காவல்படையானது 18வது தேசிய கடல்சார் தேடல் மற்றும் மீட்பு வாரியக் (National Maritime Search and Rescue Board - NMSARB) கூட்டத்தை புது தில்லியில் ஏற்பாடு செய்துள்ளது.
- ஒவ்வொரு ஆண்டும் வணிகக் கடற்படையினர், அரசுக்குச் சொந்தமான கப்பல்கள் மற்றும் மீனவர்களின் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு முயற்சிகளை NMSARB வாரியமானது அங்கீகரிக்கின்றது.

| வ. எண் | விருதுகளின் பெயர் | வெற்றியாளர் |
|---|---|---|

| | | |
|---|---|---|
| **1** | 2018-19 ஆம் ஆண்டிற்கான வணிகக் கப்பல் | எம்.வி ஆசியா எமரால்டு III<br>(இது ஒரு மீன்பிடி படகில் இருந்து 6 உயிர்களைக் காப்பாற்றியது) |
| **2** | மீனவருக்கான விருது | மகாராஷ்டிராவைச் சேர்ந்த ஆனந்த் எ அம்பயர் (மூழ்கும் மீன்பிடி படகில் இருந்து 11 உயிர்களைக் காப்பாற்றியதற்காக) |
| **3** | அரசாங்கத்திற்குச் சொந்தமான SAR பிரிவு | ஐ.சி.ஜி கப்பல்கள் சுஜோய் & ஐ.சி.ஜி.எஸ் விக்ரம்<br>(புதிய மங்களூரில் இருந்து ROSV சாகர் சம்படாவிலிருந்து 46 உயிர்களைக் காப்பாற்றியதற்காக) |

# விளையாட்டுச் செய்திகள்

## ஃபிஃபா தரவரிசை

- ஃபிஃபாவின் ஆண்டு இறுதித் தரவரிசையின் படி, இந்திய ஆண்கள் கால்பந்து அணியானது 108வது இடத்தில் உள்ளது.
- இருப்பினும், இந்திய அணி இந்த ஆண்டு 11 இடங்கள் பின்தங்கியுள்ளது (டிசம்பர் 2018 ஆம் ஆண்டில் ஃபிஃபா தரவரிசையில் இந்தியா 97வது இடத்தில் இருந்தது).
- தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக பெல்ஜியம் முதலிடத்திலும் பிரான்ஸ் இரண்டாவது இடத்திலும் பிரேசில் மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- ஆசிய நாடுகளில், இந்தியா 19வது இடத்தையும் ஜப்பான் முதலிடத்தையும் கொண்டுள்ளது (ஜப்பான் ஒட்டுமொத்தமாக 28வது இடத்தில் உள்ளது).

# முக்கிய தினங்கள்


## சர்வதேச மனித ஒற்றுமை தினம் - டிசம்பர் 20

- சர்வதேச மனித ஒற்றுமை தினமானது ஆண்டுதோறும் டிசம்பர் 20 ஆம் தேதியன்று ஐக்கிய நாடுகள் சபையால் அனுசரிக்கப்படுகின்றது.
- இந்தத் தினமானது ஒற்றுமையின் கலாச்சாரத்தையும் வறுமையை எதிர்த்துப் பகிர்ந்து கொள்ளும் மனப்பான்மையையும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஐ.நா பொதுச் சபையானது 2005 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியன்று ஒற்றுமை நாளைக் கடைப்பிடிப்பதாக அறிவித்தது.




## தேசியக் கணித தினம் - டிசம்பர் 22

- கணிதவியலாளர் சீனிவாச ராமானுஜரின் பிறந்த நாளில் ஒவ்வொரு ஆண்டும் தேசியக் கணித தினம் கொண்டாடப்படுகின்றது.
- இந்தத் தினத்தின் முக்கிய நோக்கமானது மனித குலத்தின் வளர்ச்சிக்கு கணிதத்தின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும்.
- 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதியன்று தேசியக் கணித தினம் நாடு முழுவதும் முதல் முறையாகக் கொண்டாடப்பட்டது.




# இதரச் செய்திகள்

## "இந்திய மருந்தியல் நூல்" - முதலாவது அங்கீகாரம்

- ஆப்கானிஸ்தான் இஸ்லாமியக் குடியரசின் பொது சுகாதார அமைச்சகத்தின் மருந்துகள் மற்றும் சுகாதாரத் தயாரிப்புகளின் தேசிய ஒழுங்குமுறை ஆணையமானது இந்திய மருந்தியல் நூலை (Indian Pharmacopoeia - IP) முதல் முறையாக அங்கீகரித்துள்ளது.
- IP என்பது அடையாளம், தூய்மை மற்றும் வலிமை ஆகியவற்றின் அடிப்படையிலான இந்தியாவில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் மருந்துகளுக்கான தரங்கள் குறித்த அதிகாரப்பூர்வ புத்தகமாகும்.
- இதன் மூலம், ஆப்கானிஸ்தான் நாடானது IPயை அங்கீகரித்த முதல் நாடாக உருவெடுத்துள்ளது.

- இதனை மத்திய வணிகத் துறை மற்றும் மத்திய சுகாதார & குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் சார்பாக இந்திய மருந்தக ஆணையமானது வெளியிடுகின்றது.
- 1940 ஆம் ஆண்டு மருந்துகள் மற்றும் அழகு சாதனச் சட்டம் மற்றும் 1945 ஆம் ஆண்டு விதிகள் ஆகியவற்றின் கீழ் இந்தப் புத்தகத்தின் தரங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★